Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 24/2023

**2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | மேற்பார்வையாளர் |
| பெயர் | - | மதன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | முத்துப்பாண்டி | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | எம்.ஜி.ஆர். நகர் | வயது | - | 42 |
| சாதி | - | - | | | |

**17.10.2023**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை** :

1. நான் வால்பாறை எம்.ஜி,ஆர் நகரில் வசித்து சோலையார் டேமில் உள்ள டாஸ்மாக்கில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05-02-2023 அன்று இரவு 7.00 மணியளவில் எம்.ஜி.ஆர் நகரில் உள்ள எனது வீட்டின் அருகில் சபரிகார்த்திக் வீட்டிற்கு முன்னாடி எனது மனைவி பிரவீனா, நந்தினி, திவ்யா மூவரும் நின்று பேசிக்கொண்டு இருக்கும்பொழுது ஆஜர் எதிரி வின்சென்ட் வந்து தேவிடியா முண்டைகளா பேசிட்டு இருக்கிங்க என்று ஆபாசமாக பேசினார்.

2. இதை கேட்ட சபரிகார்த்திக் ஏன் பொம்பளைங்கள இப்படி பேசுற என்று கேட்டார். அப்படிதாண்டா பேசுவே தாயோலி மவனே என்று சபரியை பார்த்து ஆஜர் எதிரி சொன்னார். நான் குடிக்கும்போது எல்லாம் நீ பணம் தரனுன்டா இப்ப குடிக்கனும் பாக்கெட்ல இருக்க பணத்தை கொடுடா என்று சொல்லி அவரை கல்ல எடுத்து அடிக்கபோனார். அப்ப சத்தத்தை கேட்டு நானும், மணிக்குமார் ஓடிவந்தபோது கல்லை கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டார். ஆஜர் எதிரி ஜெயிலுக்கு போய்விட்டு வந்தபிறகு ஆம்பளைங்க இல்லாத சமயத்தில் என் மனைவிகிட்ட உன் புருசன் தான் இல்லலே என்கூட வந்து படுடீ உன் கூட படுக்காம விடமாட்டேன் என்று சொன்னார். என் மனைவியின் அந்தரங்க உறுப்பை பற்றி தவறாக பேசுனார் ஷேவ் பண்ணிருக்கியா இல்லையானு

தொட்டுப்பாக்கனும் என்று ஆஜர் எதிரி சொன்னார்.

3. ஆஜர் எதிரி இவ்வாறு பேசியதற்கான வீடியோ ஆதாரம் எங்களிடம் உள்ளது. இதை கேட்டு 9-வது படிக்கும் என் பையன், 6-வது படிக்கும் எனது மகள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகிவிட்டனர். இதனால் படிப்பில் கவனம் செலுத்தமுடியாமல் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை பார்க்க கூச்சப்பட்டும் என் பிள்ளைகள் இருந்தார்கள். இதனால் எனக்கும் மன உளைச்சல் ஆகிவிட்டது. நான் குடியிருக்கும் பகுதியில் நடக்க சங்கடபட்டேன் என்று சொல்லிவிட்டு சாட்சி கண்கலங்கினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்)திரு.ரெ,செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை